சினிமா

# சினிமாவில் வன்முறை

'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது'என்று சொல்லி மாபெரும் தேசத்தின் சுதந்திரப் போரே அமைதியான வழியில் அன்று ஒரு முடிவுக்கு வந்தது அந்த அஹிம்சாவாதியின் திருமுயற்சியால். ஆனால் இன்று அதே தேசத்திலே, கத்தியின்றி இரத்தமின்றி சினிமா படம் வெளிவருவதில்லை.

அந்த வகையில் 'இரத்த ஆறு' ஓடும் எத்தனையோ படங்கள் வெளிவந்து, வெற்றிபெற்று, நிறைய மகசூலும் கண்டுவிட்டன.

தற்போது வெளிவரும் பெரும்பான்மையான தமிழ்த் திரைப்படங்களில் 'அரிவாள்' தான் அதிகாரப்பூர்வமற்ற கதாநாயகன். படம் ஆரம்பிக்கும்போதே, கொலைக்காரக் கும்பல் ஒன்று அரிவாளோடு யாரையோ இராத்திரி இருட்டில் துரத்துவதுபோலவும், இடையிடையே பன்றிக் கூட்டங்கள் பயந்து ஒதுங்குவது போலவும் காட்டி நம்மை மிரட்சியடையச் செய்து, ஓடிக்கொண்டிருக்கும் உதிரத்தை ஒரு நொடியிலேயே உறையச் செய்துவிடுகிறார்கள். மனிதனைக் கத்தியால் குத்துவதை அப்படியே ஒளிவு மறைவின்றி பச்சை பச்சையாகக் காட்டுகிறார்கள். காட்சிக்குச் காட்சி பச்சை இரத்தம் பரிமாறுகிறார்கள்.

கிராமத்துப் பொட்டல் காட்டுப் புழுதிக் காற்று மட்டுமே படிந்திருக்கும் 'வெள்ளை மனம்' கொண்ட அந்தக் கிராமத்தவர்களை, ஏதோ நித்தம் நித்தம் இரத்தத்திலே ஓடியாடி விளையாடிக் கொண்டிருப்பவர்களாகச் சித்தரிக்கும் காட்சிகள் நியாயமா?

கத்தியால் குத்தப்பட்டு இரத்த வெள்ளத்தில் மல்லாந்து கிடக்கும் கதாநாயகியை, 4 பேர் மாறி மாறிக் கற்பழிக்கும் காட்சியை முழுவதுமாகக் காட்டிக் கொண்டிருக்கிறார்களே, எப்படித்தான் நாமெல்லாம் அதைக் கண் விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறோமோ? 'இப்படியெல்லாம் நடக்குமா?' என்ற அளவில் மறைவான சூழ்நிலையில் மட்டுமே நடக்கக்கூடிய ஒரு அரிதான நிகழ்ச்சியை, இப்படி நம் கண்ணெதிரே போட்டுக் காட்டுகிறார்களே, இது வன்முறைக்குத் துணை போவதாகாதா?

ஒரு படத்தை விட மறு படத்தில் அதிகமான வன்முறை இருக்க வேண்டும் என்று இயக்குநர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு விதியை வகுத்துக்கொண்டு செயல்படுவதுபோல் தெரிகிறது. '

நாட்டில் உண்மையிலேயே நடந்த சில கொலை நிகழ்ச்சிகளை, நிழற்படங்களாக ஒரு சில தமிழ் நாளிதழ்கள் வெளியிட்டன என்பதற்காக எத்தனையோ கண்டனக்குரல்கள் எழுந்தன் எதிர்ப்புக் கட்டுரைகள் எழுதப்பட்டன. அதை ஏற்று, தற்போது அந்த நாளிதழ்கள் அப்படிப்பட்ட படங்களைப் பிரசுரிப்பதில்லை. பாராட்டுக்கள். ஆனால், மக்களை வெகு எளிதில் சென்றடையும் வகையில் சினிமாவில் 'ஒலி-ஒளி' வடிவில் காட்டப்படும் இந்த வன்முறைக்காட்சிகளைக் கண்டித்து பெரிய அளவில் கண்டனங்கள் வந்ததாக நான் அறியவில்லை.

சினிமா விமர்சனம் எழுதுபவர்களும் கூட, நல்லக் காட்சிகளைப் பற்றி மட்டுமே எழுதிவிட்டு, குறைகளை நாசுக்காகக் கூட சுட்டிக் காட்டாமல் ஊளக்கும்பிடு போடுவதன் உள்நோக்கம் தான் என்னவோ? வன்முறையாளனாக, கொலைக்காரனாக நடித்த ஹிரோ, 'அந்தப் பாத்திரமாகவே வாழ்ந்துவிட்டு வந்திருக்கிறார்' என்று பஜனை பாடி பல்லக்குத் தூக்குகிறார்கள் பலர். 'நீங்கள் நல்ல விசயத்தை மட்டுமே பாருங்கள்? கெட்டதைப் பார்க்காதீர்கள்' என்று சப்பைக்கட்டு கட்டுகிறார்கள்.

சிலர் தங்களின் படங்களில் ஒட்டு மொத்த பெண்ணினத்தையே 'திமிர்' பிடித்தவர்களாக திரும்பத் திரும்பக் காட்டுவது பெண்களை இழிவுபடுத்துவதேயன்றி வேறென்ன? வெறும் ஆயிரக்கணக்கானவர்களை மட்டுமே சென்றடையும் பொது நிகழ்ச்சியில் பேசும்போது வாய் தவறி பெண்ணை 'அவள்' என்று சொல்லிவிட்டால் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்? பொது மன்னிப்பு கோருகிறார்கள். நியாயம் தான். ஆனால், பல கோடிக்கணக்கானவர்களைச் சென்றடையும் சினிமாவில் 'தேவடியா' என்று சொல்வதை யாரும் கண்டுகொள்வதில்லையே ஏன்? அல்லது கண்டும் காணாமல் இருப்பது ஏன்?

தலையில் சரியாக முடி இல்லாதவர்கள் கூட, அழகான ஆறடிக் கூந்தல் இருப்பதுபோல் சிகை அலங்காரம் செய்து கொண்டு வந்து தன் ரசிகனை ஏமாற்றி, அவனுடைய குடிசையில் அடுப்பெரிய உதவும் அந்த அஞ்சு பத்து ரூபாயையும் பறித்துக்கொண்டு, ஈவு இரக்கமின்றி தன் ரசிகனின் குடும்பத்தையே குழியில் தள்ளுகிறார்களே, இந்தப் பித்தலாட்டத்தை எல்லாம் நாம் எப்போது உணரப் போகிறோம்? 'அத்தனை பேரும் வெள்ளை வெளேர் என்று மின்னுவார்கள்' என்று எம் மக்கள் எண்ணிக் கொண்டிருக்கும் அமெரிக்காவில் கூட எத்தனையோ கருப்பு நிறத்தவர்கள் நடிகர்களாக இருக்கிறார்கள். ஆனால் கருப்பு நிறத்தவர்களை உள்ளடக்கிய தமிழகத்தில் எடுக்கப்படும் படங்களில் கறுப்பாய் இருப்பவரையும் வெள்ளையாய்க் காட்டத் துடிப்பதேன்?

இலவசமாக தொலைக்காட்சியில் கிரிக்கெட் பார்க்கும் ரசிகர்கள், தமது அணி தோற்றுவிட்டதால் அந்த கிரிக்கெட் வீரர் கட்டிய வீட்டைத் தாக்கினார்கள். தவறுதான். ஆனால் காசு கொடுத்து போய் பார்த்த சினிமா, கண்றாவியாக இருந்தும் அதன் படைப்பாளிகள் மற்றும் நடிகர், நடிகைகள் மீது சிறிது கோபம்கூட வருவதில்லையே, அது ஏனோ?

சினிமா ஒரு பொழுதுபோக்காம். அடுத்தவனை 'போட்டுத் தள்ளுவது' எப்படி என்று வெள்ளித் திரையிலே மணிக்கணக்கில் போட்டுக் காட்டுகிறார்களே, அதைப் பச்சைக் குழந்தைகளைப் பக்கத்திலே வைத்துக் கொண்டு குடும்பத்தோடு அமர்ந்து பார்த்துவிட்டு, அங்கே திரையிலே பரிமாறப்படும் அந்தப் பச்சை இரத்தத்தை நாமும் பருகிவிட்டு அந்தப் பச்சைக் குழந்தைகளுக்கும் ஊட்டிவிட்டு வருகிறோமே, அதுதான் பொழுதுபோக்கா? புகை பிடிப்பவர்களைவிட அதனை சுவாசிப்பவர்களுக்குத் தான் பாதிப்பு அதிகம். அது போல, சினிமா எடுப்பவர்களைவிட அதனைப் பார்ப்பவர்களுக்குத் தான் பாதிப்பு அதிகம்.

இரத்தக் கறை படிந்த இதுபோன்ற படங்களையே பார்த்துவிட்டு, ஒன்றுக்குமே உதவாத சில மசாலாப் படங்களைப் பார்க்கும்போது, 'அப்பாடா... இது பரவாயில்லை' என்று தோன்றுகிறது. ஆதலால் படைப்பாளிகளே, நீங்கள் ஒன்றும் கருத்துச் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை 'வன்முறை' இருக்கக்கூடாது என்று ஒரு 'வரைமுறையை' ஏற்படுத்திக் கொண்டு படம் எடுங்கள்... இப்போதைக்கு அது போதும்.

*- பாஸ்கர் மணி*



# தம்பட்டம் அடிப்பது பிடிக்காது

சினிமாவில் மீண்டும் மறுபிறப்பெடுத்து வலம் வரும் அஜித்துடனான சந்திப்பிலிருந்து...

சூப்பர் ஸ்டார் நடித்த படத்தில், நீங்கள் மீண்டும் நடித்ததற்கான காரணம் உங்களையும் ஒரு சூப்பர் ஸ்டார் என்று காட்டிக் கொள்வதற்காகவா?

நிச்சமாக அப்படி இல்லை, எனக்கு மட்டுமல்ல, இப்போதுள்ள எல்லா நடிகர்களுக்கும் ரஜினி-கமல் தான் ரோல் மாடல். சமீபகாலமாக தயார் ஆகும் புதிய படங்களுக்கு பழைய படங்களின் பெயர்களை சூட்டுகிறார்கள், பழைய படங்களையே மீண்டும் தயாரிக்கிறார்கள். இந்த ஐடியா எனக்கு 3 வருடங்களுக்கு முன்பே தோன்றியது. சில தயாரிப்பாளர்களிடம் இதுபற்றி நான் கலந்து ஆலோசித்து இருக்கிறேன். ஆனால் யாரும் அப்போது பழைய படங்களை மீண்டும் தயாரிக்க முன்வரவில்லை.

இப்போது தாயாராகும் ரீ மேக் படங்கள் திரையுலகின் வளர்ச்சியை காட்டுகிறதா?

இந்த கேள்விக்கு நான் பதில் சொல்ல முடியாது. எஸ்.ஜே. சூர்யா நடித்த ஒரு படத்தில் தொட்டால் பூ மலரும் என்ற பழைய பாடலை பயன்படுத்தினார்கள். படத்தின் வெற்றிக்கு அந்த பாடலும் ஒரு காரணமாக அமைந்தது. பழைய பாடல்களையே திரும்ப பயன்படுத்துவதுபோல், பழைய படங்களையும் ரீ மேக் செய்தால் என்ன என்ற ஐடியா அதன்பிறகே வந்தது.

தேசிய விருதை குறிவைத்து ஒரு படத்தில் நடிப்பீர்களா?

அப்படி திட்டமிட்டு படம் செய்யும் எண்ணம் இல்லை. நல்ல கதைகளில் மட்டுமே நடிக்க விரும்புகிறேன்.

உங்களின் ரோல் மாடல் யார்?

என் பெற்றோர்கள், ரஜினிகாந்த், கமலஹாசன்.

தோல்வி படங்களிலிருந்து கற்றுக்கொள்ளும் பாடம்?

ஒரு படம் தோல்வியடைந்து விட்டால் அதற்கான ஆராய்ச்சிகளில் இறங்காமல் அடுத்த கட்டம் பற்றி யோசிக்க ஆரம்பித்துவிடுவேன் ஏனென்றால் தோல்வி படத்தை ஆராய்வது போஸ்ட்மார்டம் செய்வதை போல.

அதேபோல் என் படம் சுமரான படமாக அமைந்தாலோ, ஹிட்டாக அமைந்தாலோ வெற்றி விழா போஸ்டர்கள் அடித்து வீண் விளம்பரம் செய்வதில் எனக்கு உடன்பாடில்லை. அப்படி தம்பட்டம் அடிப்பது எனக்கு பிடிக்காத விஷயம்.

*- சினிசவுத்*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

**seven** | zero
graphic designers
**020 7043 4319**
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from **concept to design**